1975 நவம்பர் 7]

சூணாம்பேடு மலைசாதி மக்களுக்கு வீடுகள்.

* 244 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் சூணாம்பேட்டில் உள்ள மலைசாதி வகுப்பைச் சார்ந்த வில்லிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, எனது அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சூணாம்பேட்டில் அரிசன நல இலாகாவின் மூலம் மலைவாசியினருக்கு வீடு கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், தற்பொழுது அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கட்டப்படுகிற வீட்டுக்கும் ஏற்கனவே கட்டப்பட்டிருக்கிற வீட்டுக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிற காரணத்தினால் மீண்டும் அதைத் திருத்தி, அரிசன மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அந்த வீடுகளைக் கட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: பேரவைத் தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு, ரூ. 1,600 மதிப்பீட்டில், ரூ. 1,200 இனமாகவும், ரூ. 400 கடனாகவும் கொடுத்து வீடு கட்டுகிற ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில், அவர்களிடம் ஒப்புவிக்கிற நிலைமை வந்து விட்டது. இனிமேல், அந்த வீடுகளை என்ன செய்வது? திருத்தி அமைக்க முடியாத பாக்கி இருக்கிறவர்களுக்கு வேண்டுமென்றால் புதிய திட்டத்தின்கீழ் அரிசன நல இலாகாவால் கட்டப்படுகிற திட்டத்தின்படி வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, அந்த வீடு இன்னும் முடிவு பெறாமல் இருக்கிற காரணத்தினால்தான், அதைத் திருத்தி அமைத்துக் கொடுக்க இயலுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: பேரவைத் தலைவர்களே, அதுதான் முடியாது. காரணம் தாம் கட்டிக் கொடுக்கிற வீடுகள் இன்றிருக்கிற நிலையில் ரூ. 4,000, ரூ. 4,200 என்ற அளவுக்கு

வருகிறது. ஏற்கனவே பழைய திட்டத்தின்கீழ் ரூ. 1,200 இனமாகவும், ரூ. 400 கடனாகவும் கொடுக்கப்பட்டு, ரூ. 1,600 மதிப்பீட்டில் வீடு கட்டப்படுகிறது. அந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அந்த வீட்டை அப்படியே திருத்தி அமைக்க வேண்டுமானால் ரூ. 4,000-ம் சேர்ந்து ரூ. 5,600 ஆகிவிடும். அநேகமாகச் சட்டச் சிக்கல் வரும். அது முடியாது.

ஜெயபுரத்தில் அரிசனக் குடியிருப்பு.

* 245 வினா—திரு. டி. சி. திம்மராய கவுண்டர்: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜெயபுரம் கிராமத்தில் அரிசன காலனி அமைக்க அரசு ஆர்ஜிதம் செய்துள்ள நிலத்தைத் தனியார் ஆக்கிரமித்துள்ளார் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில்; அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

அம்பேத்கார் கலைக்கல்லூரி, சென்னை

* 226 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76-ம் கல்வி ஆண்டில் சென்னை டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம், வரலாறு, பி.எஸ்ஸி. கணிதம், இயல்பியல் போன்ற பாடங்கள் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அடுத்த கல்வி ஆண்டிலாவது பி.ஏ, பி.எஸ்.ஸி, பி.காம் வகுப்புகளைத் துவங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1975-76-வது ஆண்டு பட்டப் படிப்பு துவங்குவதற்காக நம்முடைய நிதிநிலைத் திட்டத்தில் ரூ. 3,22,000 ஒதுக்கப்பட்டது. அந்த